Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 268

வெள்ளிக்கிழமை
22 ஒகஸ்ட் 2025

ஆவணி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


## ஈழத்தமிழ் அகதிகளை வரவேற்போம்

அமைச்சர் பிமல் தெரிவிப்பு

விரிவு பக்கம்:- 05

படம்:
ஐ.சிவசாந்தன்



## பல்லாயிரம் பக்தர்களுக்கு மத்தியில் நல்லூர்த் தேர்த்திருவிழா பக்திபூர்வம்

விரிவு பக்கம்:- 03

## மாமுனை கடற்கரையில் கைக்குண்டொன்று மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 22
யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மாமுனை கடற்கரைப் பகுதியில் நேற்றுக் 11



# இறையாண்மையைப் பயன்படுத்தி இனப்படுகொலைகள் மூடிமறைப்பு!

## நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஐ.நா.வுக்கு தமிழ்த் தரப்பு கடிதம்!

**யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 22**

இறையாண்மை என்பதைக் கவசமாகப் பயன்படுத்தி, ஈழத் தமிழர்கள் மீது தொடர்ச்சியாகக் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை நிகழ்த்தும் இடைவிடாத நடவடிக்கைகளை இலங்கை மேற்கொண்டுவருகிறது - இவ்வாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு தமிழ்க் கட்சிகளால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. 10

## நல்லூர் தேர்த்திருவிழாவில் 15 பவுண் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக. 22
நல்லூர் தேர்த்திருவிழா வான நேற்றுமட்டும் 15 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு 11

## நல்லூரில் நகைத்திருட்டு பெண் மடக்கிப்பிடிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 22
நல்லூர் தேர்த்திருவிழாவில் நகைத்திருட்டில் ஈடுபட்ட பெண்ணொருவர் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். யாழ்ப்பாணம் பொலிஸ் 11

## மயிலிட்டித் துறைமுகம் விரைவில் நவீனமயம்!

குருநகரில் இறங்குதுறையிலும் கவனம்
அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 22
யாழ்ப்பாணம் - மயிலிட்டித் துறைமுகத்தை நவீன துறைமுகமாக மாற்றியமைப்பதற்குரிய வேலைத்திட்டம் விரைவில் ஆரம்பமாகும். அத்துடன், 11

## 2026ஆம் ஆண்டு பட்ஜெட் நவம்பர் மாதம் சமர்ப்பிப்பு

அரசதரப்பு தகவல்

விரிவு பக்கம்:- 10

## செம்மணி விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்படும்!

கிட்ணன் செல்வராஜ் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 22
செம்மணிப் புதைகுழி விடயத்தில் நீதியான விசாரணைகள்மூலம் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற 11

## செம்மணிப் புதைகுழி அகழ்வு பிற்போனது!


விரிவு பக்கம்:- 10

தெல்லிப்பழை புற்றுநோய்ப் பிரிவின்

## கணக்காய்வு, விசாரணை அறிக்கைகளை வெளியிடுவதில் தொடர் இழுத்தடிப்பு!

பொதுமக்கள், மருத்துவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 22
யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை மருத்துவமனையின் புற்றுநோய்ப் பிரிவில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் மோசடிகள் தொடர்பான விசாரணை அறிக்கைகளை வெளியிடவேண்டும் என்று பொதுமக்களும், மருத்துவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.
தெல்லிப்பழை மருத்துவமனையின் புற்றுநோய்ப் பிரிவுக்குக் கிடைத்த நிதி முறையற்ற வகையில் கையாளப்பட்டுள்ளது - என்று 11



முச்சந்தி முரளி

'நல்லூரானைக் கும்பிட வாறவையிட்ட கைவைச்சால் அம்பிடத்தான் வேணும் கண்டியளோ'

நல்லூர் ஆலயத்துக்கு அருகில்

## வீடொன்றுக்குள் நுழைந்து வன்முறைக்குழு அடாவடி!

பெருமளவு சொத்துகள் தீக்கிரை

யாழ்ப்பாணம், ஓக. 22
நல்லூர் ஆலயத்துக்கு அருகில் உள்ள வீடொன்றுக்குள் நேற்று அதிகாலை நுழைந்த வன்முறைக் குழு, அந்த வீட்டில் இருந்த பெருமளவு சொத்துகளைத் 11

சோமரத்ன ராஜபக்சவையும் இணைத்து

## செம்மணிப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணைகள் தேவை!

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்து

கொழும்பு, ஓகஸ்ட் 22
செம்மணிப் புதைகுழி வழக்கின் மரணதண்டனைக் குற்றவாளியான, சோமரத்ன ராஜபக்சவையும் இணைத்து, செம்மணிப்புதைகுழிதொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 21.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4170 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 07 28 33 74 |
| விசே எழுத்து | B |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 21.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1237 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 16 25 28 58 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 21.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0196 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 6 0 2 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 21.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2276 |
| ஆங்கில எழுத்து | I |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கங்கள் | 45 48 65 71 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 21.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5928 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 0 7 7 7 9 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 21.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1958 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 10 65 69 71 |
| விசேட எழுத்து | Z |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 21.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0503 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 7 7 9 5 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 21.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0044 |
| வெற்றி இலக்கினம் | தனுசு |
| வெற்றி இலக்கங்கள் | 10 26 27 29 |

# செம்மணி மனிதப் புதைகுழி; நீதியை நிலைநாட்டத் தலையிடுக

## பிரிட்டன் பிரதமரிடம் கோரிக்கை

**கொழும்பு, ஓக.22**

**செம்மணி மனிதப்புதைகுழி மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படுவதை ஆதரிக்கும்வகையில் நாடாளுமன்றத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்றும் அதேவேளை, மனிதப்புதைகுழி மற்றும் அதற்குச் சமாந்தரமான குற்றங்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணைப் பொறிமுறையொன்றை உருவாக்குவதற்குரிய முயற்சிகளுக்குத் தலைமைத்துவம் வழங்க முன்வரவேண்டும் என்று பிரிட்டனில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் அந்தநாட்டுப் பிரதமர் கெய்ர் ஸ்ராமரிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளனர்.**

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் அரச அனுசரணையுடனான ஒடுக்குமுறைகளால் தமிழ் மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என நாம் ஏற்கனவே அறிந்திருந்த உண்மை, தற்போது கண்டறியப்பட்டிருக்கும் செம்மணி மனிதப் புதைகுழியின் ஊடாக மீள உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. செம்மணிப் படுகொலை என்பது தனியொரு குற்றச்செயல் அல்ல. மாறாக அது நீண்டகாலமாகத் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவந்த கட்டமைக்கப்பட்ட இனவழிப்புத் திட்டத்தின் ஓரங்கமேயாகும். இன்று நாம் எமக்காக மாத்திரமன்றி நீதியோ, நினைவுகூரலோ, அங்கீகாரமோ இன்றிப் புதைக்கப்பட்ட மற்றும் அமைதிப்படுத்தப்பட்ட சகலருக்காகவும் குரல் எழுப்புகிறோம். இலங்கையில் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை பிரிட்டன் முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம் -என்றுள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 21.08.2025 | வியாழக்கிழமை | 0636 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| W | 6 2 7 2 7 7 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 21.08.2025 | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2902 | N | 15 68 72 80 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 21.08.2025 | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| U | 09 27 42 71 | 5063 |

| SASIRI DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 21.08.2025 | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் | |
| 0752 | 10 41 50 | |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 21.08.2025 | வியாழக்கிழமை |
| தனுசு | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♐ | 24 25 51 58 | 4614 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| | | திகதி | தினம் |
| | | 21.08.2025 | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| N | 34 | 30 36 48 54 | 2078 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 21.08.2025 | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| J | 28 30 41 61 | 2728 |

# சமூக வலுவூட்டலுக்காகவே சமுர்த்தித் திட்டம் நடைமுறை

## அமைச்சர் உபாலி தெரிவிப்பு



கொழும்பு, ஓக.22

சமூகக் கட்டமைப்பில் ஏழ்மை ஒழிப்பு மற்றும் சமூக வலுவூட்டலை வினைத்திறனாக்குவதற்காகவே சமுர்த்தித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

சிறந்த தெரிவுகளின் அடிப்படையில்தான் தற்போது சமுர்த்தி நலன்புரித் திட்டம் வழங்கப்படுகிறது என்று கிராமப்புற மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சமுர்த்தி (திருத்தச்) சட்டவரைவின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மலையகப் பகுதியில் 52 சதவீதமானோர் நீண்டகால ஏழ்மை நிலையில் உள்ளார்கள். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தற்போது சுமார் 40 இலட்சம் பயனாளர்கள் சமுர்த்தித் திட்டத்தில் உள்ளார்கள். 250 பில்லியன் ரூபா நிதி இருப்பைச் சமுர்த்தித் திட்டம் கொண்டுள்ளது.

நடைமுறையில் உள்ள சட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதி மற்றும் சொத்து தொடர்பான விவரங்கள் கணக்காய்வு செய்யப்படவில்லை.

சமுர்த்தி வங்கிகள் முறையாகக் கணக்காய்வு செய்யப்படாத காரணத்தால் பல சிக்கல்கள் ஏற்பட்டன. இதுவரையான காலப்பகுதியில் உள்ளகக் கணக்காய்வுகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டன. நிதி ஒழுக்கத்தைப் பேணுவதற்காகவே இந்தச் சட்டவரைவு கொண்டுவரப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)

# அரச நிறுவனங்களின் தூய்மைக்குத் திட்டம்

கொழும்பு, ஓக.22

இலங்கை அரசு நிறுவனங்களில் குவிந்துகிடக்கும் தேவையற்ற பொருள்களை அகற்ற சிறப்புத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் திட்டம் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் 4ஆம் திகதி வரை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சுத்தமான, ஆரோக்கியமான, பாதுகாப்பான மற்றும் ஆபத்தற்ற சூழலை உருவாக்கும் நோக்கில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. (ச-இ)

# வெளிச்சத்துக்கு வந்தது ஐ.ம.சக்தி குத்துவெட்டு!




## பதவிகளில் மாற்றங்களைக் கோரும் சமிந்த விஜேசிறி

கொழும்பு, ஓக.22

ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர், தேசிய அமைப்பாளர் உட்பட உயர்மட்டப் பதவிகளில் மாற்றம் அவசியம். அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படாவிட்டால் திறமையானவர்களால் புதிய கட்சியொன்று உருவாக்கப்படும் சூழ்நிலை ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கட்சிக்குள் கலந்துரையாடப்படுவதன் பிரகாரம் ஐக்கிய மக்கள் சக்தியில் நிச்சயம் மாற்றம் இடம்பெறவேண்டும். அவ்வாறு இல்லையேல் முன்னோக்கிப் பயணிக்கமுடியாது. எனது தொகுதி பண்டாரவளையாகும். ஜனாதிபதி, பொதுத்தேர்தல்களின்போது தொகுதியில் தோற்றதால் நான் தொகுதி அமைப்பாளர் பதவியைத் துறந்து, சிறந்த முன்னுதாரணத்தை வழங்கினேன்.

எனக்குப் பதவி, பட்டம் முக்கியமில்லை. அரசியல் டீலும் கிடையாது. அதனால்தான் கூறவேண்டிய விடயங்களை வெளிப்படையாகவே அறிவித்துவருகின்றேன். ஏதேனும் கட்சி அரசியல் டீலில் ஈடுபட்டால் அதற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழவேண்டும். அதற்குரிய முதுகெலும்பு எனக்கு இருக்கின்றது. தனிநபர்கள் எனக்கு முக்கியம் இல்லை.

அந்தவகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் உயர்மட்டப் பதவிகளில் மாற்றம் அவசியம். எப்படியான மாற்றம், யார், யார் மாற்றப்படவேண்டும் போன்ற விவரங்களை விரைவில் வெளியிடுவேன். கட்சியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பை கட்சித் தலைவரும் உணரவேண்டும் - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தவெள்ளத்தின் மத்தியில்


# சித்திரத் தேரேறி பவனி வந்த நல்லூர் அலங்காரக் கந்தன்



படங்கள்: ஐ. சிவசாந்தன்









யாழ்ப்பாணம், ஓக.22

'அலங்காரக் கந்தன்' எனப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று வியாழக்கிழமை இலட்சக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் மிகவும் பக்திபூர்வமாகவும், சிறப்பாகவும் இடம்பெற்றது.

நேற்றுக் காலை மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள வேற்பெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து காலை 6.15 மணியளவில் வசந்தமண்டபப் பூசைகள் ஆரம்பமாகி இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து ஆறுமுகப் பெருமான் இச்சா சக்தி, கிரியா சக்திகளான வள்ளி தெய்வயானை சமேதரராய் திருநடனத்துடன் ஆலய உள்வீதியில் எழுந்தருளினார். யாகசாலை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆறுமுகப்பெருமான் தேவியர் இருவருடன் அழகிய சித்திரத்தேரில் அலங்கார நாயகனாக ஆரோகணம் செய்தார்.

சிறப்புத் தீபாராதனை வழிபாடுகளைத் தொடர்ந்து அடியவர்கள் வடம் தொட்டிழுக்க, அடியவர்களின் அரோகராக் கோஷம் முழங்க காலை 7.30 மணியளவில் சித்திரத்தேர்ப் பவனி ஆரம்பமானது.

சித்திரத் தேர் காலை 8.30 மணியளவில் மீண்டும் இருப்பிடத்தை வந்தடைந்தது.

அதனைத் தொடர்ந்து ஆறுமுகப்பெருமானுக்குப் பச்சை சாத்தப்பட்டு ஊஞ்சற்பாட்டு இடம்பெற்றது. தொடர்ந்து காலை 9.30 மணியளவில் சித்திரத் தேரிலிருந்து வள்ளி தெய்வயானை நாயகியராக ஆறுமுகப்பெருமான் அவரோகணித்தார். சிறப்புத் தீபாராதனை வழிபாடுகளைத் தொடர்ந்து முற்பகல்10.20 மணியளவில் ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வயானை நாயகியருடன் மீண்டும் இருப்பிடம் சென்றடைந்தார்.

தேர்த்திருவிழாவை முன்னிட்டுப் பல நூற்றுக்கணக்கான ஆண் அடியவர்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், செதில் காவடிகள், பறவைக் காவடிகள், தூக்குக் காவடிகள் உள்ளிட்ட வகை வகையான காவடிகள் எடுத்தும், பெண் அடியவர்கள் அடியளித்தும், பாற் காவடிகள் எடுத்தும் தமது நேர்த்திக்கடன்களை நேர்த்தியுடன் நிறைவேற்றினர். (ச-66,17)

## 25 ஆம் திருவிழா

(தீர்த்தோற்சவம்)



நல்லூரான் சிறப்பம்சம்

### தீர்த்தமாட வரும் முருகா

தீர்த்தமாட வரும் திருமுருகா
தீர்த்துவைப்பாயா எம் துயரை
பல்லவி மாறாத சொல்லாலே
பல காலமும் சரணம் அடைந்தோமே
மாறாத தொடர்கதையாய்
எம்வாழ்வு தொடரவே
மாற்றங்கள் எமக்கருள்வாய்
போற்றித் துதிக்கிறோம் நல்லூரானே!

புலோலியூர்
வேல் நந்தன்

### திருவாய் மலர்வாய் திருமுருகா

கொடியேறிக் குடியாள வந்தவனே!
குறமாதைத் துணையாக் கொண்டவனே!
விழி பன்னிரண்டாகி நின்றவனே எமக்கு - நல்
வழி தந்து உதவாயோ மன்னவனே

திருவிழா நாள்களை எண்ணியெண்ணி
திருக் கணிதம் படித்த மண்ணில்
திருகிக் கொன்று புதைத்த கணக்கில்
திடுக்கிடும் தகவல் "நூறுக்கு மேலாம்"
ஐயகோ! தாங்க முடியுதில்லையே

நெல் விளையும் விவசாய நிலத்தில்
சொல்லிட முடியாச் சோகங்கள் காணீரோ
நல்லூரா என் கண்கள்
நமைக் காணா திருப்பதேனோ?

பாலும் பழப்பாகும் தேனும்
பருகத் தந்த பெருமக்கள் மனதில்
பாரம்! கண்ணில் ஈரம் தந்து
பெருவிழாக் காண்பதுதான் பெருமையோ?
கந்தா எம் கதறல் மொழிகள் - உன்
காதுகளைத் துளைக்காத தேனையா?

ஐயா! முருகையா! சைவச் சிறப்புக்கு
சான்றுரைத்த மண்ணில் விசித்திரச்
சாவைத் தடுத்திட முடியாதெனில்
எமைக் காக்கத் தங்கவேலை
எதற்கேந்துகிறாய் எடுத்துரை எமக்கு
தேரேறி வருமுனக்குத்
தேவாரம் பாடிவர ஊருண்டு
தேடுவாரின்றிப் புதையுண்டோருக்கு
நீதி தர யாருண்டு திருமுருகா?

சாந்தையூர் வினிஸ்

### மாசுகளை அழிக்கும் இந்த நாள்

தேரேறி வருகின்ற வேலய்யா
எண்திசையும் உம் பக்தர் பாரய்யா
உலகமெல்லாம் உம் மண்ணில் தானய்யா
வடம்பிடிக்க ஓடிவந்தோம் முருகையா
மாசுகளை அழிக்குமிந்த நாளய்யா
எம் மனக்குறைகள் தீர்த்துவிடு கந்தையா

சிவ.கிரிதரன், ஓட்டுமடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக இருக்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்று கிடைக்கும் நாள். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். வியாபாரம் வழக்கம் போலவே நடைபெறும்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் சுப நிகழ்ச்சிக்கான பேச்சு அனுகூலமாக முடியும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சுபச் செலவாக இருக்கும் .

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. அலுவலகப் பணிகளில் மிகுந்த கவனம் தேவை.

**துலாம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக் கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**விருச்சிகம் :** எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும்.

**மகரம்:** திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் வெளியூரில் உள்ள கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். உணவு விடயத்தில் கவனம் தேவை. ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல் நலனில் கவனம் தேவை. தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும். ஆதாயமும் உண்டாகும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். அலுவலகத்தில் எதிர்பாராத சலுகை கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும்.

# பிறந்த எண் பலன்கள்

ஜோதிட ரீதியாகப் பார்க்கும் பொழுது ஒவ்வொரு எண்ணில் பிறந்தவர்களுக்கும் ஒவ்வொரு குணம் உண்டு. அந்தந்த எண்ணிற்கேற்ப அவரவரின் இயல்புகளும்அமைந்திருக்கும். ஒன்றாம் எண்ணிலிருந்து 31 ஆம் எண்வரை எந்த எண்ணில் பிறந்திருந்தாலும் அதன் கூட்டுத் தொகையானது ஒன்றிலிருந்து 9 வரையே இருக்கும்.



## 1, 10, 19, 28

இந்தத் திகதிகளில் பிறந்தவர்கள் ஒன்றாம் எண் ஆதிக்கத்திற்குரியவர்கள். ஒன்றாம் எண்ணுக்குரிய கிரகம் சூரியன் ஆவார்.

எல்லா எண்களுக்கும் இந்த ஒன்றாம் எண்ணே தலைமை வகிக்கிறது. நமது சூரியக் குடும்பத்தின் தலைவனான சூரியன்தான் இதனை ஆட்சி செய்கிறார். இந்த எண்ணில் பிறந்தவர்கள் பழகுவதற்கும், பார்வைக்கும் கம்பீரமானவர்கள். தன்னம்பிக்கை இவர்களிடம் அதிகம் இருக்கும். இவர்கள் மற்றவர்களைக் கடுமையாக வேலை வாங்குவார்கள். ஆனால் அதேசமயம் மனித நேயத்துடனும் அவர்களுடன் நடந்து கொள்வார்கள். மற்றவர்களிடம் எதையும் எதிர்பார்க்கமாட்டார்கள். தங்களின் பிரச்சினைகளைக் கூடத் தாங்களே சமாளித்துக் கொள்ளும் திறமையுடையவர்கள். அடுத்தவர்களுடன் விவாதித்தால் கௌரவம் போய்விடும் என்று நினைப்பவர்கள்.

கடின உழைப்பும், கண்டிப்பான நடத்தையும் இவர்களைத் தலைமை ஸ்தானத்திற்குக் கொண்டு செல்லும். மனதில் ஊக்கமும், எதையும் தாங்கும் மனோபலமும் கொண்டவர்கள். தோல்வி ஏற்படுவதைத் தாங்கிக் கொண்டு மீண்டும் மீண்டும் மனத் துணிவுடனும், புதிய திட்டத்துடனும் சலிக்காமல் செயலாற்றுவார்கள். புதிய செய்தியினை ஆராய்வதில் மகிழ்ச்சியடைவார்கள். நேர்மையான முறையிலேயே எதையும் அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். தாங்கள் உடுத்தும் உடைகள் மற்றும் அணியும் பொருள்கள் மிகவும் மதிப்பாகத் தெரியவேண்டும் என்று அதற்காகச் செலவு செய்வார்கள். மன மகிழ்ச்சிக்காக தாராளமாகச் செலவு செய்யத் தயங்காதவர்கள்.

தாங்கள் உதவுவதைக்கூட வெளிப்படையாகச் சொல்லி விளம்பரம் அடைய ஆசைப்பட மாட்டார்கள். சூரிய புத்திரன் கர்ணன் இவரது ஆதிக்கம் நிறைந்தவர்கள். எதிரியுடன் நேரடியாகப் போரிட்டு வெற்றி பெற வேண்டும் என்று விரும்புவார்களே தவிரக் குறுக்கு வழியைத் தேடமாட்டார்கள். இதனால்தான் சகுனியின் சதித் திட்டங்களை எல்லாம் கர்ணன் எதிர்த்துக் கொண்டே இருந்தான்.

தங்களின் இரக்க குணத்ததால் பல பிரச்சினைகளையும் சந்திப்பார்கள். ஆனால் நல்ல பெயரும் புகழும் நிச்சயம் அடைவார்கள். "இவர்தான் எனது நண்பன், இவர்தான் எனது எதிரி" என்று எதையும் மறைத்து வைக்காமல் கூறி விடுவார்கள். மிகுந்த ரோஷமும், எதையும் எடை போடும் குணமும் உண்டு. வாக்குறுதி கொடுத்துவிட்டால் எப்பாடு பட்டாவது அதை நிறைவேற்றுவார்கள். பொதுவாகச் சோம்பேறித்தனமும், பொறாமையும் இவர்களுக்குப் பிடிக்காது. அடுத்தவர் பொருள்களையும் சொத்துகளையும் தீயென வெறுத்து ஒதுக்கிவிடுபவர்கள் இவர்களே. படிப்பறிவை விடப் பட்டறிவு (அனுபவம்) அதிகம் உண்டு.

எந்த வாணிகத்திலும், நேர்மையையும், வாக்குறுதியையும் கடைப்பிடிப்பார்கள். இலாபத்திற்காகத் தங்களது மனச்சாட்சியை ஒதுக்கமாட்டார்கள். தேவையானால் பெருந்தன்மையுடன் மற்றவர்களுக்கு விட்டுக் கொடுத்து விடுவார்கள். ஆனால் மற்றவர்கள் அலட்சியம் செய்தால் மட்டும் இவர்களால் தாங்கமுடியாது. அவர்களை உண்டு அல்லது இல்லை எனச் செய்து விடுவார்கள். ஆனால் நேர்மையான வழியில்தான் நடப்பார்கள். எப்பேர்ப்பட்ட எதிரியும், நேராக வந்து மன்னிப்புக் கேட்டால், உடனே மன்னிக்கும் மாண்பு படைத்தவர்கள்.

**பொருளாதாரம்:** ஒன்றாம் எண்ணில் பிறந்தவர்களுக்கு பொருளாதார நிலை ஒரே சீராக இருக்கும். ஆடம்பர வாழ்க்கையையும், உயர்தரமான ஆடை அணிகலன்கள் அணிவதையுமே விரும்புவார்கள். எவ்வளவு சம்பாதித்தாலும் அதற்கேற்ற செலவுகளும் இருக்கும். கடன்கள் அதிகம் ஏற்படாது. ஏற்பட்டாலும் அவற்றைச் சமாளிக்கும் ஆற்றலும் இருக்கும்.

**தொழில்** ஒன்றாம் எண் சூரியனின் ஆதிக்கம் கொண்டது. எதிலும் முதன்மையாக செயற்படக்கூடிய திறன் கொண்டவர்கள், வாழ்வில் அதிகம் சம்பாதிக்கும் திறமை, நல்ல உயர்வான பதவிகள், பலரை நிர்வாகிக்கும் பொறுப்பு யாவும் அமையும். அரசியல் சம்மந்தப்பட்ட துறைகளில் நல்ல முன்னேற்றம் கிட்டும். அரச உத்தியோகமும் இவர்களுக்கு அமையும்.

அதிர்ஷ்ட கல் சூரியனின் ஆதிக்கமான எண் 1இல் பிறந்தவர்கள் அதிர்ஷ்ட கல்லாக மாணிக்கத்தை செப்பு உலோகத்தில் பதித்து அணியவேண்டும். இந்த அதிர்ஷ்ட கல்லை அணிவதன்மூலம் மனோதைரியம், சாந்தமான குணம், எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி போன்ற நற்பலன்கள் உண்டாகும். உஷ்ணம் சம்மந்தப்பட்ட நோய்கள், கண் நோய் போன்றவை விலகும். தனவரவும், நன்மதிப்பும் உண்டாகும்.

**அதிர்ஷ்ட திகதி - 1,10, 19, 28 அதிர்ஷ்ட நிறம் - இளஞ்சிவப்பு, மஞ்சள், அதிர்ஷ்ட திசை - கிழக்கு அதிர்ஷ்ட கிழமை - ஞாயிறு, அதிர்ஷ்ட கல் - மாணிக்கம், அதிர்ஷ்ட தெய்வம் - சிவன்**

# மாமனிதர் சி.சிவமகாராசா நினைவுதின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.22

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவருமான அமரர் மாமனிதர் சி.சிவமகாராசாவின் 19ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது சங்க வளாகத்திலுள்ள சிவமகாராசாவின் உருவச் சிலைக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது தெல்லிப்பழைக் கூட்டுறவு மருத்துவமனையின் முன்னாள் தலைவரும், மூத்த கூட்டுறவாளருமான இ.பேரின்பநாயகத்துக்கு கூட்டுறவுப் பிதா சிவமகாராசா விருது - 2025 வழங்கப்பட்டது [illegible] ஓய்வுபெற்ற 5 பணியாளர் [illegible]

(ச-41-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு திரும்புகின்ற அகதிகளை அன்புடன் பொறுப்பேற்போம்!

அமைச்சர் பிமல் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.22

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் அனைவரையும் அன்புடன் பொறுப்பேற்போம். அவர்களுக்கு முழுமையாக ஒத்துழைப்புக் களை வழங்குவோம் என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிக்கையில், கைதுசெய்யப்பட்ட இரண்டு சம்பவங்களை அடிப்படையா கக்கொண்டு இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை இலங்கைக்கு அனுப்பிவைக் கும் நடவடிக்கைகளை ஐக் கிய நாடுகள் அகதிகள் முகவ ரகம் ஏன் இடைநிறுத்தியது என்பதை அறியவில்லை. இதுதொடர்பில் அமைச்சு மட் டத்தில் பேச்சுகளில் ஈடுபடு வோம். இவ்வாறான கைதுக ளைத் தடுக்க நீதியமைச்சுடன் கலந்துரையாடுவோம். தமி ழர்கள் என்பதால் கைதுசெய் யப்படுகின்றனர் என்று வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள ராஜ பக்சக்களின் ஒரு சில அவதா ரங்கள் குறிப்பிடுவது முற்றி லும் தவறானது.

ஏதாவது ஒரு விடயத்தை பிடித்துக்கொண்டு அரசாங் கத்தின்மீது சேறுபூசுவதை ஒரு தரப்பினர் தற்போது பிர தான செயற்பாடாகக் கொண் டுள்ளார்கள். வடக்கிலும் தெற் கிலும் இனவாதிகள் தற்போது அநாதையாகியுள்ளார்கள்.

இலங்கையில் குடிவரவு மற் றும் குடியகல்வுச் சட்டம் உள் ளது. குடிவரவு மற்றும் குடிய கல்வுச் சட்டத்தின் 45(1)பி அத் தியாயத்தின் 34 ஆவது பிரி வின் பொதுக்காரணிகளுக்கு அமைவாகவே இந்தக் கைது கள் இடம்பெற்றுள்ளன. தற் போது குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்கள் கடந்த காலங்களில்சட்டத்திருத்தத்துக் கான எவ்வித நடவடிக்கைக ளையும் எடுக்கவில்லை.

சட்டத்தில் காணப்படும் சிக்கல் கள் தொடர்பில் நீதியமைச் சுடன் கலந்துரையாடி இவ்வா றான கைதுகளை நிறுத்த நட வடிக்கை எடுப்போம். குறை பாடுகளை சுட்டிக்காட்டுங்கள், அதை விடுத்து இனவாத செயற் றிட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங் காதீர்கள்- என்றார். (எ-இ)

# ரணிலுக்கு சி.ஐ.டி. அழைப்பு

கொழும்பு, ஓக.22

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை இன்று வெள் ளிக்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு ஆஜராகு மாறு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக் காலத்தில் அமெரிக்காவுக்கும் பின்னர் இங்கிலாந்துக்கும் மேற்கொண்ட பயணம் தொடர் பான விசாரணைகளை மேற் கொள்வதற்காகவே குற்றப் புல னாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார். (ச-இ)

# ரணிலைக் கைதுசெய்தால் சர்வதேச நெருக்கடி வரும்

சுகீஸ்வர பண்டார ரெிவிப்பு

கொழும்பு, ஓக.22

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கைதுசெய் வதற்கு அரசாங்கம் முற்பட்டால் கடும் சர்வதேச நெருக்கடி களை எதிர்கொள்ள நேரிடும் என்று முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பிரத்தியேக செயலாளராகப் பதவி வகித்தவரும், புதிய மக்கள் முன்னணியின் தலைவருமான சுகீஸ்வர பண்டார தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ள நிலையில் அவர் இதனைத் தெரிவித் தார். கைதுசெய்தல், அரசியல் பழிவாங்கல் என்பவற்றைத் தவிர தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வேறு எதையும் செய்யவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவைக் கைதுசெய்தால் என்ன நடக்கும் என்பதைப் பார்க்கலாம். ரணில் விக்கிரமசிங்க சென்றது தனிப் பட்ட விஜயமா, உத்தியோகபூர்வ விஜயமா என்பது விசாரணை கள்மூலம் தெரியவரும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)



# விமான நிலையங்களின் முறைகேடுகள் விசாரணை

கொழும்பு, ஓக.22


விமான நிலையங்கள் மற்றும் விமானசேவை கள் (இலங்கை, தனியார்) நிறுவனம் மற்றும் ஶ்ரீலங்கன் விமானசேவை ஆகியவற்றில் கடந்த காலங்களில் நடந்த ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் குறித்து பொதுமக்களிட மிருந்து முறைப்பாடுகள், கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்படவுள்ளன.

அவை குறித்து விசாரிக்க ஜனாதிபதி விசேட விசாரணைக்குழு நிறுவப்பட்டுள்ளது. (ச-இ)

தண்ணீர்ப் போத்தலை

# ரூ. 200க்கு விற்றவருக்கு 5 இலட்சம் ரூபா அபராதம்

கொழும்பு, ஓக.22



கொழும்பு துறை முக நகரத்திலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் 70 ரூபா விலை குறித்த தண் ணீர்ப் போத்தலை 200 ரூபாவுக்கு விற்றவருக்குக் கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றம் 5 இலட்சம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. கடந்த 16ஆம் திகதி துறைமுக நகரத் தில் நுகர்வோர் விவகார அதிகாரசபை யின் விசாரணை அதிகாரிகள் மேற் கொண்ட சோதனையில் குறித்த வியா பாரி சிக்கினார். (ச-இ)




## இதிலையும் குழப்பமா?

ஹர்த்தால் வைக்கிறதிலதான் எங்கடயாக்கள் நாளுகளை மாத்தி , நேரத்தைக் குறைச்சு கடைசியில அந்தக் ஹர்த்தால் நடக்குமா இல்லையா எண்டு குழப்பியடிக்கினம் எண்டு பார்த்தால், கடைசியா நல்லூர்த்தேருக்கு லீவு விடுறதி லையும் ஒரே குழப்பம். யாழ்ப்பாணத்தில மட்டுமில்லாமல் இலங்கையிலையே பேமஸா நல்லூர்க் கோயில் தேருக்கு எல்லா இடத்திலையிருந்தும் ஆக்கள் லட்சக்கணக்கில வருவினம். அதால போக்குவரத்து நெருக்கடி, இடநெருக்கடி இதுகளைக் குறைக்கிறதுகாகவும், தேருக்குப் போறதுக்காக வும் யாழ்ப்பாணம் வலயத்தில "எங்களுக்கு லீவு வேணும்" எண்டு கேக்கிற பள்ளிக்கூடங்களுக்கு மட்டும் நல்லூர்த் தேருக்காக லீவு குடுக்கிறது வழமை. இந்த முறையும் அப்பிடி லீவு கேக்கிற யாழ்.வலயப் பள்ளிக்கூடங்களுக்கு லீவைக் குடுக்கச் சொல்லி நாலைஞ்சு நாளுக்கு முதலே ஆளுநர் சொல்லிட்டாராம். அதோட வடக்கில உள்ள பள்ளிக்கூடங்களுக்கு லீவு குடுக்கிறதெண்டால் அதுக்கு அமைச்சர்மாரோ, அவையின்ர செயலாளர்மாரோ அறிவிக் கிறேலை. ஏனெண்டால் இஞ்சையுள்ள பள்ளிக்கூடங்கள் மாகாணத்தின்ர கட்டுப்பாட்டில இருக்கிறதால, ஆளுநரோ இல்லாட்டி இஞ்ச உள்ள பொறுப்பான அதிகாரியளோதான் அந்தமுடிவை எடுத்து, அறிவிக்கலாம்.

ஆனால் இந்த நடைமுறையள் ஒண்டுமே தெரியாத திசைகாட்டி எம்.பி.க்கள் சிலரும், வீட்டுக்கட்சியில பின்கத வால எம்.பி.யா வந்தவரும், "நல்லூருக்கு லீவை வாங் கிக் குடுத்தால் எங்கட பக்கம் காத்து எழும்பும்" எண்டு நினைச்சு, இதுக்கெண்டு மினக்கெட்டு பிரதமரைச் சந்திச்சு நல்லூருக்கு யாழ்ப்பாணத்தில உள்ள எல்லாப் பள்ளிக் கூடங்களுக்கும் லீவு விடச்சொல்லிக் கேட்டிருக்கினம். அவாவும் சரியெண்டு தலையாட்டிட்டுப் போட்டா. அப்பிடி அவா தலையாட்டினதை "அரசாங்கம் நல்லூர்த் தேருக்கு லீவு விட்டிருக்கு.இது எங்கட வெற்றி" எண்டு பேஸ்புக்கில ஒரே கூவல். ஆனால் அப்பிடி யாழ்ப்பாணத்தில உள்ள பள்ளிக்கூடங்களுக்கு லீவு விடச்சொல்லி மேலிடத்தில இருந்து எந்த உத்தரவும் வரேலை. ஆனால் இந்த எம்.பி.க் கள் தங்கட லெட்டர் ஹெட்டில "யாழ்.மாவட்டப் பள்ளிக் கூடங்களுக்கு லீவு" எண்டு எழுதி அதை பேஸ்புக்கில போட்டதால, இந்த லீவு விசயம் காட்டுத்தீ மாதிரி எல்லா இடமும் பரவி, எல்லாத் திணைக்களக்காரருக்கும், மாகாணக் கல்வியமைச்சுக்கும் போன் பண்ணி "லீவு இருக்கா? இல்லையா?" எண்டு கேட்டிருக்கினம். மாகாணக் கல்வியமைச்சும் "எங்களிட்ட யாழ்.வலயத்தில இருந்து 28 பள்ளிக்கூடங்கள்தான் லீவு கேட்டவை, அவைக்கு மட்டும்தான் லீவு" எண்டு சொல்லிப்போட்டினம். இப்பிடி எம்.பி.மார் ஒரு கதையும், டிப்பார்ட்மெண்ட்காரர் இன் னொரு கதையும் சொல்ல சனத்துக்கு "நல்லூர்த்தேருக்கு பள்ளிக்கூடங்களுக்கு லீவு இருக்கோ, இல்லையோ?" எண்டு இரவுவரை ஒரே குழப்பம்.

கடைசியா, இரவு எட்டுமணி போலதான் "யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் நல்லூர்த்தேருக் காக லீவு. அதுக்குப் பதிலா இன்னொரு நாள் பள்ளிக்கூடம் நடக்கும்" எண்டு ஆளுநர் அறிவிக்கத்தான், குழப்பத்துக்கு ஒரு முடிவு வந்தது. இந்த அறிவிப்பை ஆளுநர் பகலே விட்டிருந்தால் இப்பிடி எல்லாரும் குழம்பியிருக்கத் தேவை யில்லை. ஆனால் சிக்கல் என்னெண்டால் இந்த முடிவை ஆளுநர் தானா எடுக்கேலை எண்டு தெரியுது. அப்ப ஏன் அவர் லீவைக் கடைசி நேரத்தில அறிவிச்சவர்? முதலே ஓர்டர் போட்டமாதிரி யாழ்.வலயத்தில இருக்கிற 28 பள்ளிக் கூடங்களுக்கு மட்டும் லீவைக் குடுத்திட்டு விட்டிருக்கலாமே? இப்பிடிச் சில கேள்வியள் இருக்கு. ஆனால் எல்லாத்துக்கும் பின்னால அரசியல் சித்துவிளையாட்டுகளும் இருக்கு. அதுகளைப் பற்றித் தகவல் கிடைச்சால் பிறகு சொல்லலாம் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் நெஞ்சைவிட்டு நீங்காத நினைவலைகள்

35 ஆவது வருட 11 ஆவது வருட

உதயம்
18.06.1933



அஸ்தமனம்
20.08.1990



உதயம்
02.07.1935

அஸ்தமனம்
27.08.2014

தோலகட்டி வயாவிளான்
அமரர் **வைத்திலிங்கம்**
**நடராசா**
(முன்னாள் பொறுப்பதிகாரி. வலி. கிழக்கு பிரதேசசபை - அச்சுவேலி)
திதி : 22.08.2025

தோலகட்டி வயாவிளான்
திருமதி **சிவபாக்கியம்**
**நடராசா**
திதி : 24.08.2025

அன்புடனும், பாசத்துடனும், எம்முடன் வாழ்ந்து நாம் சிறப்புடன் வாழ வழிகாட்டி, எம்மை எல்லாம் விட்டு மறைந்த எங்களின் அன்புத் தெய்வங்கள் அப்பா, அம்மாவே ! ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் எங்களின் இதயங்களில் உங்களின் நீங்காத நினைவலைகளை சுமந்தபடி ஆண்டு தோறும் நல்லூரானின் தீர்த்தக்கரையில் நின்று கொண்டு கண்ணீர் பூக்களினால் உங்களின் பாதங்களுக்கு சமர்ப்பிக்கும் நாங்கள்!

இல.27/5, மெமோறியல் மூன்றாம் ஒழுங்கை,
மானிப்பாய்.
077 995 6974, 021 255 5252

என்றும் உங்களின் நினைவுகளில்
அன்பு மகன்மார், மகள்மார்,
மருமக்கள்மார், பேரப்பிள்ளைகள்.

## INVITATION FOR BIDS
## MANTHAI EAST PRADESHIYA SABHA - PANDIYANKULAM

1. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Chairman, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB) but limited to the bidders who registered under Northern Province.
3. Qualification requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 22.08.2025 until 04.09.2025 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 28.08.2025 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 3.00 P.M on 04.09.2025 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security | |
| | | | | | | | | | Amount (Rs.) | Validity Period |
| 1 | PSDG/NP/MU/MEPS/2025/LAR/03 | Construction Of Pandiyankulam Market Road - Stage II | PSDG Fund | 2.25 | 63 | C9 above (Highway) | 2,000.00 | 06-Nov-2025 | 33,750.00 | 04-Dec-2025 |
| 2 | MA/NP/MU/MEPS/2025/LAR/02 | Renovation Of Pandiyankulam 5th Lane | PSDG Fund | 1.70 | 63 | C9 above (Highway) | 2,000.00 | 06-Nov-2025 | 25,550.00 | 04-Dec-2025 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal (T.P: 021 228 4434, E.mail: manthaieastps@yahoo.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) S/No from 01 to 04 must be delivered to the Chairman, Manthai East and Bids (Original & Duplicate) S/No from 05 to 07 must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam on or before 03.00 P.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal commencing at 10.30 AM as stated in table above.
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Divisional Procurement Committee,
Manthai East Pradeshiya Sabha,
Pandiyankulam, Naddankandal.

22.08.2025

(CS45889) J-1

# 'பொ-பொ' பேரணியின் நாயகர்களும் நாங்களே

## சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.22

பொத்துவில் முதல் பொலி கண்டி வரையிலான போராட்டத்தின் நாயகர்களே நாங்கள்தான். அதற்காக பொலிஸ் விசாரணைகளைக்கூட எதிர்கொண்டோம் எனத் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது, கடந்த காலங்களில் சுமந்திரன் போராட்டங்களை முன்னெடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகள் உள்ளதாக கேள்வியெழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களிலும் பல்வேறு போராட்டங்களை முன்னின்று நாம் நடத்தி இருந்தோம். வலி. வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிக்கக்கோரி போராட்டங்களை முன்னெடுத் தோம். காணி சுவீகரிப்புக்கு எதிராகச் சட்டப்போராட்டங்களையும் முன்னெடுத்தோம். தற்போதும் அந்த வழக்குகள் விசாரணையில் உள்ளன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் நீக்க கோரி கொழும்பில் இருந்து அம்பாந்தோட்டையில் உள்ள மஹிந்த ராஜபக்சவின் சொந்த ஊரான தங்காலை வரையில் பேரணி சென்றோம். பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான போராட்டத்தை முன்னின்று நடத்தி பொலிகண்டி வரையில் கொண்டுவந்து சேர்த்ததும் நாமே. வடக்கு - கிழக்கில் இருந்து இராணுவ முகாம்கள் முற்றாக அகற்றப்படும் வரையில் நாம் தொடர் போராட்டங்களை எதிர்காலத்தில் முன்னெடுப்போம்- என்றார். (ச-20)

## வீடு/காணி விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு
அருகில் வீடு வளவு
விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு: குகநேசன்
07904 074 740 (UK)
0044 7904 074 740 (Whatsapp)

## பணியாளர்கள் தேவை

### தனு என்ரபிறைஸ்

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் தனு என்ரபிறைஸ் நிறுவனத்திற்கு ஆண், பெண் பணியாளர்கள் தேவை. பழக விரும்புபவர்களும் இணைந்து கொள்ளலாம். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புக்கு:
077 021 0817

(CS 59185) E

## முதலாம் ஆண்டு நினைவுநாள்



அமரர்
**வாமதேவன் ஞானசோதி (கெங்கா)**
(ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்
போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்)

உதிர்வு 02.09.2024
திதி: 22.08.2025

மங்காத செல்வமே
மறையாத பெட்டகமே
தங்களின் பாத காணிக்கையாக
எங்களின் அன்பினை சொரிகின்றோம்.

செம்பாட்டு வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்
077 624 8327

(CS/59163) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

அன்பே மகிழ்ச்சிக்கான கதவுகளைத் திறக்கும் முதன்மையான திறவுகோல்.

வெண்டெல் ஹோம்ஸ்

# தவறுகளுக்கு நியாயம் சொல்லாதீர்!


இலங்கையின் பொருளாதார விவாதங்களில் அடிக்கடி கேட்கப்படும் ஒரு சொல் அச்சிடல். போக்குவரத்து பிரதி அமைச்சர் மருத்துவர் பிரசன்ன குணசேன அண்மையில் அச்சிடுவதால் நாட்டில் பணவீக்கம் அதிகரிக்காது என்று கூறியிருப்பது பொதுமக்களிடையேயும் பொருளாதார நிபுணர்கள் மத்தியிலும் பெரும் கவனத்தைப் பெற்றிருக்கின்றது. அமைச்சர் கூறுவது போல, நாட்டின் வருமானம் 24.7 வீதம் உயர்ந்துள்ளது, செலவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது, எனவே பணவீக்கம் அதிகரிக்கவில்லை என்பது ஒருபுறம் உண்மையாகத் தோன்றலாம். ஆனால் இலங்கை போன்ற பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கும் நாட்டுக்கு இவ்வாறு புதிதாக நாணயத்தாள்களை அச்சடிப்பதென்பது ஆரோக்கியமானதா என்பதை ஆராய வேண்டியது அவசியமானது.

நாணயத்தாள்களை அச்சிடல் என்பது, அரசாங்கம் செலவுகளைச் சமாளிக்க புதிய காகித நாணயங்களை வெளியிடும் செயல்முறை. பெரும்பாலும் அரசின் வருமானக் குறைபாடு அல்லது வெளிநாட்டுக் கடன் சுமை காரணமாக, இந்த முறையை நாடுகள் தற்காலிகத் தீர்வாக எடுத்துக்கொள்கின்றன. இலங்கை அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளில் பொருளாதார வீழ்ச்சியை சமாளிக்க வங்கிக் கடன், சர்வதேச உதவி, அதோடு நாணயத்தாள் அச்சிடலையும் நாடியது. அச்சிடப்படும் பணம் உடனடியாக சந்தையில் ஓடும்போது, அரசின் செலவுகள் நடைபெறமுடியும். சம்பளங்கள், ஓய்வூதியங்கள், அடிப்படை நலத்திட்டங்கள் சீராக வழங்கப்படும். இதனால் தற்காலிகமாக சந்தையில் நம்பிக்கை ஏற்படும். பொருளாதாரம் திடீர் வீழ்ச்சி அடைவதைத் தவிர்க்கமுடியும். ஆனால் இவை காலப்போக்கில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

இன்றைய ஆட்சியாளர்கள் எதிர்க்கட்சியாக இருந்த போது கோத்தாபய ராஜபக்சவும், ரணில் விக்கிரமசிங்கவும் இவ்வாறு புதிதாக நாணயத்தாள்களை அச்சடித்தனர். அப்போதெல்லாம் அச்சிடல் நாட்டை வீழ்த்தும் எனக் கடுமையாக இதே திசைகாட்டியினர் விமர்சித்தனர். ஆனால் இன்று அதையே நியாயப்படுத்துகிறார்கள். பொருளாதாரக் கொள்கை என்பது நிலையான அடிப்படையில் இருக்கவேண்டுமே தவிர, அதிகாரத்தில் இருக்கும் தருணத்தைப் பொறுத்து மாறக்கூடாது. நாணய அச்சிடலால் பொருளாதாரம் நிரந்தரமாகச் சீராகும் என நம்புவது அபாயகரமானது. அதற்கு மாற்றாக உற்பத்தித்துறையை விரிவுபடுத்துதல், வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல், ஏற்றுமதியை அதிகரித்தல், ஊழலைக் கட்டுப்படுத்தல், அரசாங்கத்தின் தேவையற்ற செலவுகளைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலமே நிலையான பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். இலங்கை போன்ற வளர்ந்துவரும் நாடுகளில், நாணயத்தாள் அச்சிடலின் பாதிப்புகள் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில் நேரடியாகப் பிரதிபலிக்கும். ஆகையால் தற்காலிக இலாபங்களை விட நீண்டகாலத் தீர்வுகளைத் தேடும் தைரியமான பொருளாதாரக் கொள்கைகளே நாட்டின் உண்மையான முன்னேற்றத்தை உறுதிசெய்யும் என்பதை அரசாங்கமும், அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்களும் புரிந்துகொள்ளவேண்டும். அதைவிடுத்து தவறான முடிவுகளுக்கு நியாயம் கற்பிக்க முயல்வது நாட்டை மேன்மேலும் பின்னோக்கியே இழுத்துச்செல்லும்.




# தீர்வில்லை



## 4 ஆவது நாளாகத் தொடரும் தபால் ஊழியர்கள் போராட்டம்

**யாழ்ப்பாணம், ஓக.22**
**தபால் ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளுக்கு தீர்வு காணக்கோரி நேற்று நான்காவது நாளாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**

19 கோரிக்கைகளை முன்வைத்து, நாட்டின் அனைத்துத் தபால் நிலையங்களிலும் தபால் தொழிற்சங்கங்கள் கடந்த 17ஆம் திகதி நள்ளிரவுமுதல் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் தபால்மூலம் சேவைகளைப் பெறவந்த மக்களும் வேலைநிறுத்தம் காரணமாகக் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

எனினும், தங்கள் கோரிக்கைகளைப் பற்றி விவாதிக்க கலந்துரையாடலுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. அதனால் வேலைநிறுத்தத்தைத் தொடரப்போவதாகத் தபால் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு பணிக்குத் திரும்பாத தபால் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயாராகிவருவதாகத் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## டயானாவுக்கு பிடியாணை

கொழும்பு, ஓக.22
குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே விசாரணைக்கு முன்னிலையாகத் தவறியதால், அவரைக் கைதுசெய்யுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. இந்த வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதவான் முன்பு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ச-இ)

## ஐ.நா. கப்பல் இலங்கை வருகை



கொழும்பு, ஓக.22
ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் டொக்டர் ப்ரிட் ஜோப் நான்சென் என்ற ஆராய்ச்சிக் கப்பல், கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளது.

மொரிசியஸின் போர்ட் லூயிஸிலிருந்து புறப்பட்டு கொழும்பு வந்துள்ள இந்தக் கப்பல், இன்று ஆராய்ச்சிப் பணிகளுக்காக பங்களாதேஷுக்குப் புறப்படவுள்ளது.

இதன்போது ஆராய்ச்சிக்குழுவில் இரண்டு இலங்கை விஞ்ஞானிகளும் பங்கேற்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## 'உலகின் மிகச்சிறந்த நீதிபதி' பிராங்க் கேப்ரியோ மறைவு

கொழும்பு, ஓக.22
'உலகின் மிகச்சிறந்த நீதிபதி' என்று புகழ்பெற்ற நீதிபதி பிராங்க் கேப்ரியோ தனது 88 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

கணையப் புற்றுநோயுடன் நீண்டநாள் போராடிய நிலையில் அவர் காலமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீதிபதி என்பவர் தண்டனையை மட்டுமே வழங்குபவர் இல்லை. விதிமீறல், குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை மட்டுமே கொடுக்கக்கூடாது. அவர்களின் இடத்தில் இருந்தும் யோசித்துப் பார்த்து மன்னிப்பும் வழங்கலாம் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டியவர் பிராங்க் கேப்ரியோ. (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை 23.08.2025
சனிக்கிழமை - ஆவணி 07
சுபநேரம் : 03.05 - 04.35
ராகுகாலம் : 09.05 - 10.30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச லயன்ஸ் கழகம்
மாவட்டம் 306 D12 நடாத்தும்
கார்னிவல் மற்றும்
இலவச மருத்துவ சேவைகள்

பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள திருவிழா காலத்துக்கான லயன்ஸ் காரியாலத்தில் கண் பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கலும், (Eye Screening), இலவச இரத்த அழுத்த பரிசோதனை, (Blood pressure Testing) இலவச நீரிழிவு பரிசோதனை, (Diabetic Screening) நடைபெற்றுவருகின்றது.
மேலும் எமது காரியாலத்தில் புதிய லயன்ஸ் அங்கத்துவம் (New Members) பற்றிய மேலதிக விபரங்களையும் (Lions Branding) பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதி திரட்டுவதற்காக
சர்வதேச லயன்ஸ் மாவட்டம் 306 D12 நடாத்தும்

கார்னிவல் (CARNIVAL)

Lions International – District 306 D12
District Governor's 6.0 Service Project

Vision
Environment
Diabetes
Hunger
Childhood Cancer
Youth

இடம்
சங்கிலியன் பூங்கா, நல்லூர்.
காலம்
20.08.2025 தொடக்கம்
24.08.2025 வரை
நேரம்
மாலை 5.00 இரவு 12.00

லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதிப் பங்களிப்பு செய்ய விரும்புவோர் தொடர்புகளுக்கு :
(Lions Eye Hospital Financial Contributors to Contact)
Lion. Dr K.M.Pathmanathan
Inaugural Distrct Governor 306 D12
077 732 3702
district306d12@gmail.com

We Serve With Humanity

CAC வழங்கும்
யாழ் மண்ணில் முதன் முறையாக...
யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில்




Powered by
WARMATHA
021 222 1933
187, Power House Road, Jaffna.

ADRIAN in
யாழ் மண்ணே வணக்கம்
இசையால் இணைவோம்

ADRIAN
ADRIAN
076 560 0566

Main Sponsor
Coral
Colombo-04
Luxury Apartments
0777 99 44 09

உங்கள் ரிக்கட்டுக்களை
bookmyshow
இல்
பெற்றுக் கொள்ளலாம்.

23 ஒகஸ்ட்
மாலை 6.00 மணிக்கு

இவர்களுடன் தென்னிந்திய முத? தர இசைக் கலைஞர்கள் நவீன், குமார் மற்றும் இசையமைப்பாளர் பாடகர் சிற்பி

Ticket Hot Line
077 610 0795 / 077 610 0652 / 077 610 0201
1500 /= 2000/= 3000/= VIP (5000/=) VVIP (10,000/=)

EVENT MANAGEMENT BY KT PRASATH - 077 963 8565 (CAC)

Sponsors
ARRUL'S (PVT) LTD. 076 44 31 576
ARRUL Global Express
MANGO MANSION
saravana ADVERTISING & DIGITAL PRINTING
tvi HD
உதயன்

# மரண அறிவித்தல்



## பாலசுப்பிரமணியம் பிரதீபன்

**(அபிவிருத்தி உத்தியோகத்தர் -
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி)**

புத்தூர் மேற்கு சிவன் கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் பிரதீபன் நேற்று முன்தினம் (20.08.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் - விக்னேஸ்வரி (கௌரி) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமசிவம்பிள்ளை (நாராயணபிள்ளை ஸ்ரோர்ஸ் - கொக்குவில்) மற்றும் சகுந்தலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், ஆரணியின் அன்புக்கணவரும், தனீபன் (யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), தருணன் (யா/ஸ்ரீ புத்தூர் ஸ்ரீ இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நதீஸ் (லண்டன்), ஜிந்துஜா (லண்டன்), ஜிந்துஜன் (ஆசிரியர் - மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு அத்தானும், கீர்த்தனா (லண்டன்), பிரணவன் (லண்டன்), தனுஷியா (ஆசிரியர் - மு/பண்டார வன்னியன் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ஆதேஷ், அர்வின் ஆகியோரின் பெரியப்பாவும், லிதேஷ், ஷாகினியின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொக்குவிலில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக "புத்தூர் கிந்து சிட்டி" இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 24.01.1982
மறைவு 20.08.2025

முதலிகோவில் ஒழுங்கை
k.k.s வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

தகவல்:
குடும்பத்தினர்
077 902 7808

(CS 59186) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி
வாழ்த்துகின்றோம்
கமநல அபிவிருத்தி உத்தியோகத்தராக
பணிபுரிந்து நேற்று (21.08.2025) வியாழன்
சேவையில் இருந்து ஓய்வு பெறும்
நாகேந்திரம் முருகதாஸ்
அவர்களுக்கு
வேலணை விவசாய சமூகம் சார்பாக
எமது வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கின்றோம்.
Best Wishes
வேலணை
விவசாய சமூகம்.



# யாழ். பல்கலைக்கழகத்தில் ஆவணப்படங்கள் திரையிடல்

யாழ்ப்பாணம், ஓக. 22
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள்துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணப்படங்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் திரையிடப்படவுள்ளன.

யுத்தத்தின்போது தங்கள் அன்புக்குரிய உறவுகளை இழந்தோரின் நினைவுகளை ஞாபகப்படுத்தும் 'தடயம்', அக்குபஞ்சர் வைத்தியமுறையின் சாதக பாதகத் தன்மைகளைகளைப் பேசும் 'அக்குபஞ்சர்', மலையகத்தில் ஹட்டன் பிரதேசத்தில் களிமண்ணால் மேற்கொள்ளப்படும் ஆபரணக் கைத்தொழில் தொடர்பான 'ரெறகோட்டா ஜுவல்ஸ்', முல்லைத்தீவு குமுளமுனை கிராமத்தில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களின் கதையான 'கொலைக்களம்', நெடுங்கேணி ஊஞ்சல்கட்டிப் பிரதேசத்தில் நிகழ்ந்துவரும் யானை மனித முரண் பாட்டை வெளிக்கொண்டுவரும் 'வேழம்', திருகோணமலையில் வெல்கம் விகாரை வழியான சிங்கள பௌத்தமயமாக்கத்தைச் சொல்லும் 'ஈழம்', மட்டகளப்பு, கல்லடி பிரதேச பறங்கியர் சமூக மக்களின் வாழ்வியல் பற்றிய 'படிமம்', மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்களில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் மூலம் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் மக்கள் எதிர் நோக்கும் சவால்களை விபரிக்கும் 'லயத்துக் குயில்', யுத்தத்தில் உடல் அங்கங்களை இழந்து சிரமத்தின் மத்தியில் அன்றாட வாழ்க்கையை வாழும் கேப்பாப்பிலவு கிராம மக்களின் பதிவான 'ரணம்', மயானங்களில் அவை சார்ந்து சேவைவழங்கும் சாதாரண மனிதர்களின் அன்றாட வாழ்வியல் சிக்கல்களைப் பதிவு செய்யும் 'அறியாப்பாதை' ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்படவுள்ளன. (ம)

வேலையாட்கள் தேவை
யாழ் திருநெல்வேலியில் உள்ள எமது நிறுவனத்திற்கு சமையல் வேலை ஓரளவு தெரிந்த சுத்திகரிப்பு தொழிலாளி ஆண்/பெண் தேவை. மற்றும் கட்டிட வேலைக்கு ஆர்வமுடைய ஆண் மேற்பார்வையாளர் (பகுதிநேரம்) வேலைக்கு தேவை.
தொடர்புகளுக்கு: 077 953 0496

## INVITATION FOR BIDS (IFB)
## DISTRICT SECRETARIAT, KILINOCHCHI

1. The Department Procurement Committee (DPC) on behalf of District Secretariat, Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in Grade mention below in Highways specialty.
4. "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri lanka interms of the public Contract Act No 03. of 1987. The certificate of registration (PCA 03) shall be submitted with the bid"
5. Interested eligible bidders may obtain further information from Director Planning, District Secretariat, Kilinochchi (Email:-dpskilinochchi@gmail.com) from 25.08.2025 until 08.09.2025 from 9.00 am to 3.00 pm inspect the bidding documents at the address District Secretary, District Secretariat, Kilinochchi.
6. Qualification requirements to qualify for contract award is given in "section 4 of the qualification information and Section 5 of the Scheduleof the procurement document.
7. A complete set of procurement documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the District Secretary, Kilinochchi, Telephone 021 228 5760 from 25.08.2025 until 08.09.2025 from 9.00 am to 3.00 pm. upon payment of a non-refundable fee Rs. 4,000 . The method of payment will be by cash.
8. Bids shall be delivered in duplicate to the address at Chairman, Department Procurement Committee (DPC), District Secretariat Kilinochchi, on or before 10.00 am on 9th September 2025 late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a Bid-Security, of an amount and validity date mentioned in the table below.
10. The pre-bid meeting will be held on 10.00 am on 4th September 2025 at the District Secretariat Kilinochchi.

Table

| S.No | Bid No. | Name of the Work | Estimated Cost without VAT (Rs.Mn) | CIDA Grade Required Highways. | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| 01 | KL/DPS/DO16/ RRP/06-1 | Improvement of Inthirapuram main road | 8.0 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |
| 02 | KL/DPS/DO16/ RRP/06-2 | Improvement of Vempodukeny Puliyady road | 7.7 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |
| 03 | KL/DPS/DO16/ RRP/06-3 | Improvement of Ithavil Ampalavalai Road | 8.0 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |
| 04 | KL/DPS/DO16/ RRP/06-4 | Improvement of Mugamaali Kilaali Road | 7.9 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |
| 05 | KL/DPS/DO16/ RRP/06-5 | Improvement of Eluthumadduvaal Ampalavalai road | 8.2 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |
| 06 | KL/DPS/DO16/ RRP/06-6 | Improvement of Kariyalaingapaduvan Road | 8.0 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |
| 07 | KL/DPS/DO16/ RRP/06-7 | Improvement of Kumulamunai Road | 8.2 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |
| 08 | KL/DPS/DO16/ RRP/06-8 | Improvement of Kiranchi Thannerthoddy Road | 7.8 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |

Chairman,
Departmental Procurement Committee,
District secretariat,
Kilinochchi.

(R/45891) J-1

# இணுவில் ஆஞ்சநேயர் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக.22
இணுவில் - மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.35 மணி முதல் 9.18 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்.
அதனையொட்டி எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை காலை 9.05 -10.05 மணிவரையுள்ள சுபவேளையில் கிரியைகள் ஆரம்ப மாகவுள்ளன.
25ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிமுதல் 27ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிவரை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தெய்வீகக்கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக.22
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகக்கலை அர்ச்சனை நிகழ்வு நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு இடம்பெறவுள்ளது.
இதன்போது நுண்கலைமாணி திருமதி மஞ்சுசீத்தா ஜெயதீஸின் மாணவர்கள் வழங்கும் வீணை இசை நிகழ்வும், சிவராசா நவநீதன் வழங்கும் பண்ணிசைக் கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-41)

# ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.22
நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருந்திருவிழாக் காலத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் ஆன்மிக அருளுரை இன்று வெள்ளிக்கிழமை 25ஆவது நாளாக நடைபெறவுள்ளது.
இன்று இரவு 8 மணி முதல் இரவு 8.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு ' குருவாய் வருவாய்! ' எனும் தலைப்பில் ஆன்மிக அருளுரை ஆற்றுவார். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறையாண்மையைப்...

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:-
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வில், இலங்கை மீதான சர்வதேச விசாரணையை வலியுறுத்தி எம்மால் அனுப்பப்படும் இந்தக் கடிதத்தை, நீங்கள் இதற்கு முன்னர் இதே விடயம் தொடர்பில் அனுப்பிய கடிதங்களுடன் இணைத்தோ அல்லது தனித்தோ வாசிக்கமுடியும்.

1. சர்வதேச விசாரணையை நிகழ்த்துவதற்காக 1948ஆம் ஆண்டு இனப்படுகொலை வரைபின்கீழ் குற்றமாக அடையாளப்படுத்தப்பட்டவை நிகழ்த்தப்பட்டுள்ளதா என்பதையும் அந்தக் குற்றங்களின் நோக்கத்தையும் மதிப்பீடு செய்யும் அதிகாரத்துடன்கூடிய, சர்வதேச சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை நிறுவவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். எந்தவொரு விசாரணைக்கும் அளிக்கப்படும் அதிகாரம், 1948ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை வரைபின்படி முழுக் காலவரையறையையும் உள்ளடக்க வேண்டும்.

ஸ்ரீலங்காவின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள தமது தாயகத்தில் ஈழத்தமிழர்கள்மீது நிகழ்த்தப்பட்ட குற்றங்கள் சுயாதீன நீதிப்பொறிமுறையின் கீழ் விசாரிக்கப்படவேண்டும் என உலகப் புகழ்பெற்ற சர்வதேச அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஏனெனில், இலங்கை அரசின் செயற்பாடுகள், முழுஅளவிலோ அல்லது பகுதியளவிலேனும் ஈழத்தமிழரை அழிப்பதற்கான நோக்கத்தைக் கொண்டிருப்பதுடன் அந்த அழிப்புத் தொடர்பான எந்தவொரு விசாரணையும் நடைபெறாதவாறு நுட்பமாகத் தடை செய்துவருவதும் இனப்படுகொலை வரைபின் அகவிதி 2இன்படி இனப்படுகொலையாகும்.

இலங்கை அரசு, எந்தவொரு வகையிலும் சர்வதேச விசாரணைக்கு எதிராகவே இருப்பதுடன் ஈழத்தமிழர்களின்மீது தொடர்ச்சியாகக் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையினை நிகழ்த்தும் இடைவிடாத திட்டமிட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகிறது. குறிப்பாக ஐ.நா. சாசனத்தின் அகவிதி 2(7)இல் குறிப்பிடும் 'அரசுக்கு இருக்கும் இறையாண்மையினை' இதற்கான பாதுகாப்புக் கவசமாக ஸ்ரீலங்கா பயன்படுத்தி வருகிறது.

ஆனால், இறையாண்மையை சர்வதேச குற்றங்களுக்கு எதிரான ஒரு கவசமாக பயன்படுத்தமுடியாது என்பதே சட்ட ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் உறுதி செய்யப்பட்டுள்ளநியதி ஆகும். இதனை, சிரியாவுக்கு விசாரணை செய்ய ஐ.நா. மனித உரிமை ஆணையகம் ஏற்படுத்திய விசாரணைக் குழு போன்ற ஐ.நா. பொதுச் சபை, ஐ.நா. பாதுகாப்புச் சபை ஆகியவை எடுத்த செயற்பாடுகள் உறுதிப்படுத்துகின்றன.

ஈழத்தமிழர்கள் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுவோர் என்ற நம்பிக்கையில் நாம் தொடர்ந்தும் இருக்கிறோம். சர்வதேச விசாரணையைக் கோருவதற்கு உரிமையும் எங்களுக்கு உள்ளது.

இவற்றினடிப்படையில் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 60ஆவது கூட்டத் தீர்மானம்,

(அ) ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் சர்வதேச சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை அமைக்க அதிகாரம் அளிக்க வேண்டும், அல்லது

(ஆ) அத்தகைய பொறிமுறையை அமைக்க ஐ.நா. பொதுச் சபையிடம் கோரிக்கை விடுக்கும் விதமாக இருக்க வேண்டும் எனக் கவனமாக வலியுறுத்துகிறோம். இந்தப் பொறிமுறைக்கு 1948ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை வரைபின் கீழ் குற்றச் செயல்களின் வடிவமைப்பைத் தீர்மானிக்கும் அதிகாரமும், சம்பந்தப்பட்ட முழு காலவரையறையையும் உள்ளடக்கும் அதி காரமும் கட்டாயம் வழங்கப்படவேண்டும்.

2. ஈழத்தமிழர் இனப்படுகொலைக்கு ஸ்ரீலங்கா அரசின் பொறுப்பை நிரூபிக்க, இனப்படுகொலைக் குற்றத்தைத் தடுக்கும் மற்றும் தண்டிக்கும் வரைபின் அகவிதி 9இன் கீழ், முழுமையான கால வரையறையையும் உள்ளடக்கும் வகையில், ஸ்ரீலங்கா குடியரசுக்கு எதிராக நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர், பார்வையாளர் நாடுகள், வழக்குத் தொடங்கவேண்டும் என வலியுறுத்துகிறோம்.

16 ஆண்டுகள் கடந்தும், தங்கள் மீது நடைபெற்ற இனப்படுகொலையின் உச்சத்தை இந்த உலகம் வெறுமனே பார்த்துக்கொண்டிருந்ததுடன், நுணுக்கமாக அந்த இனப்படுகொலையை மறுப்பதும், அமைதியாக இருப்பதன்மூலம் புறக்கணிப்பதும் ஸ்ரீலங்கா தொடர்ந்து மேற்கொண்டுவரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைச் செயல்களுக்கு உலகம் ஆதரவு அளிப்பதாகவே ஈழத் தமிழர்கள் உணர்ந்துவருகின்றனர்.

1948ஆம் ஆண்டின் இனப்படுகொலை வரைபின் அகவிதி 9இல் குறிப்பிடப்பட்டிருக்கும் உடன்படிக்கை அடிப்படையிலான அதிகாரப் பிரிவின் கீழ், அவ்வரைபில் பங்கேற்றிருக்கும் இரண்டு நாடுகளுள் ஒன்று, மற்றொரு நாடு மேற்கொள்ளும் மீறல்களைக் குற்றஞ்சாட்டி நேரடியாக வழக்குத் தொடங்கலாம். ஸ்ரீலங்கா 1950ஆம் ஆண்டு 12ஆம் திகதி அகவிதி ஒன்பது உட்பட அனைத்து விதிமுறைகளையும் ஏற்றுக்கொண்டு அதில் இணைந்துள்ளது. இதனால், யு.என். எச்.ஆர்.சி. அமைப்பில் அங்கம் வகிக்கும் எந்தவொரு நாடும் ஸ்ரீலங்காவுக்கு எதிராக வழக்குத் தொடரும் வாய்ப்பைப் பெற்றுள்ளன.

3. இலங்கையின் வடபகுதியில் உள்ள செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாராய்ச்சிகளை மேற்பார்வை செய்வதற்காக, 'மனிதப் புதைகுழி பாதுகாப்பு மற்றும் விசாரணைக்கான சர்வதேச நெறிமுறைகள் போர்ன்மொத் நெறிமுறை' கீழ் அதிகாரம் வழங்கப்பட்டு சர்வதேச நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என்றும் நான் வலியுறுத்துகின்றோம்.

முப்படை மற்றும் பொலிஸாரை உள்ளடக்கிய அரசின் ஆதரவுடன் செயற்பட்ட அமைப்புகள், ஈழத்தமிழ் பொதுமக்களைபடுகொலைசெய்து, இரகசியமாகப் புதைத்தன என்பதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் உள்ளன. அரசின் ஆதரவுடன்நடைபெறும் இனப்படுகொலைக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட சமூகம் தங்களைப் பாதுகாக்க முயன்றபோதிலும், 'உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற கோதாவில் ஈழத்தமிழ் மக்களின் மீது அழித்தொழிப்பு நடத்தப்பட்டது. செம்மணி மனிதப் புதைகுழியானது பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தாண்டி, அடையாளம் காணப்பட்ட ஈழத்தமிழ் மக்களைப் பகுதியளவிலேனும் அழிக்கத் திட்டமிட்ட நோக்கம் இருந்ததை வெளிப்படுத்தும் உறுதியான சான்றாகும். இது, ஈழத்தமிழர் மீதான இனப்படுகொலைக் குற்றச்சாட்டை வலுப்படுத்துகிறது.

ஸ்ரீலங்காவின் நீதித்துறை வரலாற்றில், சட்டத்துக்குப் புறம்பான கொலைகளுக்கான ஆதாரங்கள் மறைக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட பல சம்பவங்கள் உள்ளன. மொஹமட் தாஜுதீன் வழக்கு அவற்றில் ஒன்று. இத்தகைய அச்சுறுத்தும்முறை, உள்நாட்டுவிசாரணைகளின் நேர்மையைப் பற்றித் தீவிரமான சந்தேகங்களை எழுப்புகிறது. இத்தகைய செயல்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்ற எந்த அறிகுறியும் இல்லை, மேலும் செம்மணி வழக்கும் அதே நிலையைச் சந்திக்கும் என்ற நியாயமான அச்சம் ஈழத்தமிழ் மக்களிடம் உள்ளது.

ஊடக அறிக்கைகளின்படி 2023ஆம் ஆண்டு செப்ரெம்பரில், ஸ்ரீலங்காவின் வடபகுதியான முல்லைத்தீவில் பணியாற்றிய ஒரு தமிழ் நீதிபதி, உயிரச்சுறுத்தல் மற்றும் கடுமையான மன அழுத்தம் காரணமாக, தனது பதவியை விடுத்து ஸ்ரீலங்காவை விட்டு வெளியேறினார். அவரின் ராஜினாமா, ஒரு தொல்பொருள் தள வழக்கை உள்ளடக்கிய சில நுணுக்கமான வழக்குகளுக்கான அழுத்தம் மற்றும் அவரின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை காரணமாக ஏற்பட்டது. இது, இங்கு பாதுகாப்பின்மையையும் நீதித்துறையின் சுயாதீனமின்மையையும் வெளிப்படுத்துகிறது.

இந்த உண்மைகளின் அடிப்படையில், செம்மணி மனிதப் புதைகுழி தளத்தில் நடைபெற்றுவரும் அகழ்வாராய்ச்சியை மேற்பார்வை செய்து கண்காணிக்கவும், வழக்கு நடைமுறைகளில் சர்வதேச தலையீட்டை எளிதாக்கவும், அதிகாரத்துடன்கூடிய சுயாதீன நிபுணர் குழுவை அமைக்கவேண்டும் என்ற முன்மொழிவை, ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் தீர்மானத்தில் சேர்க்கவேண்டும் என வலியுறுத்துகிறோம்.

4. ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் 60ஆவது தீர்மானத்தில், சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமான பாதுகாப்பு வரைபுகளுக்கு முரணான தற்போதுள்ள மற்றும் எதிர்காலத்தில் உருவாக்கப்படும் திருத்தச் சட்டங்கள் மற்றும் புதிய சட்டங்களை இயற்றுவதை நிறுத்துமாறு வலுவான அழைப்பைச் சேர்க்கவேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

1983ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8ஆம் திகதியன்று இலங்கையின் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்ட 6ஆவது திருத்தச் சட்டம், அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச உடன்படிக்கையை வெளிப்படையாக மீறுகிறது. இது, சுயாட்சி அரசியல் நிலையைத் தீர்மானிக்கும் உரிமையை அமைதியான முறையில் வலியுறுத்துவதை குற்றமாக்குகிறது. இதன்மூலம் இந்த அரசியலமைப்புத் திருத்தமே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் முன்னோடியாகச் செயற்பட்டது.

இருப்பினும் ஸ்ரீலங்கா அரசு, இத்தகைய கொடூரமான நடவடிக்கைகளின் அடிப்படைக் காரணமான 6ஆவது திருத்தச் சட்டத்தைத் தொடாமல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினை நீக்குவதற்கு மட்டுமே ஒப்புக்கொண்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தினைப் போன்ற அடக்குமுறைச் சட்டங்களை உருவாக்கும் வழி திறந்தேயிருக்கின்றது. மேலும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினை நீக்குவதற்கான தெளிவான காலக்கெடு எதுவும் இல்லை. இதனால், பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது தொடர்ந்தும் அடக்குமுறை மற்றும் அந்தச் சட்டத்தின் கருவியாக இருந்துவருகிறது.

எனவே, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில், 6ஆவது திருத்தச் சட்டத்தை நிறுத்தவும், பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தினை ஒரு குறிப்பிட்ட மற்றும் அமுலாக்கக்கூடிய காலக்கெடுவில் நீக்கவும் ஸ்ரீலங்காவிற்குத் தெளிவான, உறுதியான கோரிக்கையைச் சேர்க்க வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம். மேலும், பயங்கரவாதத் தடுப்புச் சட்ட விதிகளை இன்னும் ஆபத்தான பிரிவுகளுடன் மீண்டும் அறிமுகப்படுத்தும் அல்லது மாற்றியமைக்கும் எந்தச் சட்ட முயற்சிகளையும் இரத்து செய்யவும் வலியுறுத்தவேண்டும்.

முடிவாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 60ஆவது அமர்வு தனது தீர்மானத்தில் பின்வரும் நடவடிக்கைகளை சேர்க்குமாறு வலியுறுத்தப்படுகிறது:

1. 1948ஆம் ஆண்டு இனப்படுகொலைக் குற்றங்களைத் தடுக்கும் மற்றும் தண்டிக்கும் வரைபின்படி முழுக் கால அளவு அதிகாரத்தை உள்ளடக்கிய பணி ஆணையுடன், பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை நிறுவுதல்.
2. பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் தங்களின் கடமைகளின்படி, உறுப்புநாடுகள் மற்றும் பார்வையாளர் நாடுகள் ஸ்ரீலங்காவுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடங்குதல்.
3. செம்மணி மனிதப் புதைகுழி மீது சுயாதீன மேற்பார்வை மற்றும் கண்காணிப்பை உறுதிசெய்ய போர்ன்மொத் நெறிமுறையை செயற்படுத்தக்கூடிய நிபுணர் குழுவை அமைத்தல்.
4. சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டப் பொறுப்புகளுக்கு முரணான தற்போதைய அல்லது எதிர்கால சட்ட நடவடிக்கைகளின் இயற்றுதலை இடைநிறுத்தி, தடைசெய்தல் - என்றுள்ளது. (அ-ம)

## செம்மணிப்...

அரியாலை செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் இன்று ஆரம்பமாகவிருந்த நிலையில், பணிகள் பிற்போடப்பட்டுள்ளன.

இதன்படி எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமையில் இருந்து அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## 2026ஆம்...

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், எதிர்வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் இந்த வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. எனினும் வரவு - செலவுத்திட்டம் முன்வைக்கப்படும் திகதி விவரங்கள் இன்னமும் உறுதிசெய்யப்படவில்லை.

ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க, பதவியேற்ற பின்னர் தாக்கல் செய்யப்படும் இரண்டாவது பாதீட்டுத் திட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி விமான நிலையத்தை தரமுயர்த்துவதே நோக்கம்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக.22
பலாலி விமானநிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றியமைக்கவே எதிர்பார்க்கிறோம். முறையான வணிகத் திட்டமிடல்களின்றி இந்த இலக்கை அடையமுடியாது என்று துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

பலாலி விமான நிலையத்தை விரிவாக்கக் காணிகளைக் கையகப்படுத்துவது தொடர்பில் ஆராயப்படுகின்றது. தற்போதுள்ள விரிவாக்கத் துக்குப் புதிதாக காணிகள் அவசியமில்லை என்றாலும் மேலும் விரிவு செய்யவேண்டுமாயின் காணிகள் பெற்றுக்கொள்ளவேண்டி வரும். இந்த விமான நிலையத்தை இன்னுமொரு மத்தள விமான நிலையம் போன்று அல்லாமல் வெற்றியளிக்கக் கூடிய விமான நிலையமாக மாற்றியமைக்கவே எதிர்பார்க்கின்றோம்.

2021ஆம் ஆண்டில் இந்த விமான நிலையத்தால் இலாபம் இருக்கவில்லை. 41 மில்லியன் ரூபா நட்டம் இருந்தது. 2022ஆம் ஆண்டு 5 மில்லியன் வருமானம் கிடைத்தாலும் 82 மில்லியன் ரூபா செயற்பாட்டு நட்டமாக இருந்தது. 2023ஆம் ஆண்டில் 152 மில்லியன் ரூபா இலாபம் இருந்தது.

2024ஆம் ஆண்டு 286 மில்லியன் ரூபா வருமானமும், செயற்பாட்டு இலாபமாக 76 மில்லியன் ரூபாவும் இருந்தது. 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரையில் 197 மில்லியன் ரூபா வருமானமும், செயற்பாட்டு இலாபமாக 67 மில்லியன் ரூபாவும் கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் பெரியளவிலான விமானங்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டுமாயின் பெரியளவிலான விமான ஓடுபாதை, விமான நுழைவுப்பகுதி, விமானங்களை நிறுத்திவைக்கும் பகுதி மற்றும் பயணிகள் பகுதி உள்ளிட்ட நிர்மாணங்களுக்காக வசதிகளை ஏற் படுத்தவேண்டும். இதற்காக மேலதிகக் காணிகளையும் கையகப்படுத்தவேண்டிவரும். இங்கு ஆய்வுகளை நடத்தி அது தொடர்பான அறிக்கைகளைப்பெற்றே அந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம்.

அங்கு தற்காலிக டென்ட் ஒன்று தற்போது அமைக்கப்பட்டிருந்தாலும் நிரந்த நிர்மானமொன்றை வரும் மாதங்களில் உருவாக்க நடவடிக்கை எடுப்போம். நிச்சயமாக சர்வதேச விமானநிலைய
மாக யாழ். விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணம் எங்களிடம் உள்ளது. அதை வணிகத் திட்டங்களுடனேயே செய்ய வேண்டும். அந்த நடவடிக்கையை நாம் முன்னெடுப்போம் - என்றார். (எ-இ)

---

## மயிலிட்டி...

குருநகரில் இறங்குதுறை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் - இவ்வாறு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மயிலிட்டி துறைமுகத்தை நவீன துறைமுகமாக மாற்றுவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் அதற்குரிய வேலைத்திட்டம் ஆரம்பமாகும்.

அத்துடன், 165 மில்லியன் ரூபா செலவில் யாழ். கொழும்புத்துறையிலுள்ள துறைமுகத்தையும்நவீனதுறைமுகமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ். குருநகர் பகுதியில் இறங்கு துறைமுகமொன்றை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்குரிய ஆரம்பக்கட்ட நடவடிக்கை இடம்பெறுகின்றது. மன்னார், பேசாலையிலும் இறங்குதுறையை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவும்தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-44)

## நல்லூரில்...

நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி கலும் பண்டாரா தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போதே, அந்தப் பெண் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து ஆறு பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் நீர்கொழும்பைச் சேர்ந்தவர் என்பதும், நல்லூர்த்திருவிழாவில் நகைகளைத் திருடுவதற்காகவே யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளார் என்றும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அவரை நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## கணக்காய்வு,...

மன்ற உறுப்பினர்கள் மற்றும் வேறு சிலரால் சில மாதங்களுக்கு முன்னர் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து, இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. அந்தக் குழுக்களின் விசாரணைகளில், தெல்லிப்பழை மருத்துவமனையின் புற்றுநோய்ப் பிரிவில் எந்த மோசடிகளும் இடம்பெறவில்லை என்பதும், நிதி தவறாகக் கையாளப்படவில்லை என்பதும் தெரியவந்தது. அது தொடர்பான அறிக்கைகள் வடமாகாண ஆளுநருக்கும், வடமாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

எனினும், குறித்த அறிக்கையில் உள்ள விடயங்கள் இன்னமும் பொதுவெளியில் வெளிப்படுத்தப்படவில்லை.

இந்தநிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும், இன்னும் சிலரும் தெல்லிப்பழை மருத்துவமனையின் புற்றுநோய்ப் பிரிவில் தவறான நிதிக் கையாள்கை இடம்பெற்றதாக மீண்டும் அவதூறு பரப்ப ஆரம்பித்துள்ளனர். இதையடுத்தே, இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்திய குழுக்களின் அறிக்கையை மீண்டும் பொதுவெளியில் பகிரங்கப்படுத்தி நீண்டகாலச் சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று பொதுமக்களும் மருத்துவர்களும் கோரியுள்ளனர்.

தெல்லிப்பழைமருத்துவமனையின்புற்றுநோய்ப் பிரிவை மையப்படுத்தி ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்காமல், விடயத்தை இழுத்தடிப்பதற்கு துறைசார் செயற்பாட்டாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், 'எதற்காக அந்த அறிக்கை தொடர்ந்தும் வெளிப்படுத்தப்படாமல் உள்ளது?' என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தெல்லிப்பழைமருத்துவமனையின்புற்றுநோய்ப் பிரிவு பொறுப்பதிகாரிக்கு ஆதரவாகவும், தெல்லிப்பழை மருத்துவமனையின் புற்றுநோய்ப் பிரிவை மையப்படுத்தி முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளைக் கண்டித்தும் தெல்லிப்பழை மருத்துவமனைக்கு முன்பாக மருத்துவர்களும், பொதுமக்களும் இணைந்து அண்மையில் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## வீடொன்றுக்குள்...

தீக்கிரையாக்கியுள்ளது. வீட்டில் இருந்தவர்கள் நல்லூர் தேர்த்திருவிழாவுக்குச் சென்றிருந்த வேளையில், வீட்டில் யாரு மற்ற நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய வன்முறைக் குழு இந்த வன்முறையில் ஈடுபட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

வீட்டிலிருந்து பெருமளவு புகை வெளியேறுவதை அவதானித்த அயலவர்கள் ஒன்றுதிரண்டு தீயைக் கட்டுப்படுத்தியுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26-20-66)

## செம்மணிப்...

தப்படவேண்டும் - என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணிப் புதைகுழி அகழ்வுப் பணிகளின்போது சர்வதேசக் கண்காணிப்பு மிக அவசியமானது. அத்துடன், சர்வதேச நிபுணத்துவ உதவிகளும் அகழ்வுப் பணிகளுக்காகப் பெறப்படவேண்டும்.

செம்மணிப் புதைகுழி அகழ்வுப் பணிகளுக்கு தொழில்நுட்பம் சார்ந்த நிபுணத்துவத்தை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்துவருவதாக பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் டேவிட் லமி அண்மையில் தெரிவித்துள்ளார். அவருக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன். அவருடைய கருத்துத் தொடர்பில் அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட குறித்த அகழ்வாய்வுகளில் பெண்கள், சிறார்கள், குழந்தைகள் என பல தரப்பட்டோருடைய எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதுடன், குழந்தைகள் பால் அருந்தும் போத்தல், சிறார்களின் விளையாட்டுப் பொம்மை, சிறுமிகளின் ஆடைகள், காலணிகள், கண்ணாடி வளையல்கள், பாடசாலைப் புத்தகப்பை என்பன சான்றுப்பொருள்களாக மீட்கப்பட்டிருந்தன. இவ்வாறான கொடூரங்களைக் காணும் போது நெஞ்சமெல்லாம் பதைபதைக்கின்றது. கண்களில் நீர்நிறைகின்றது.

மேலும் இதுவரை இனங்காணப்பட்ட 147 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளில் 90 வீதத்துக்கும் அதிகமானவை நிர்வாணமாக்கப்பட்டுப்புதைக்கப்பட்டவையென கடந்த 14ஆம் திகதி சட்ட மருத்து அதிகாரியால் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. இதன்மூலம் இங்கு பெரும் குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளன என்பதும், இந்தப் புதைகுழியில் பெண்கள், சிறுவர்கள், குழந்தைகளென பல்வேறு தரப்பினரும் மிகக் கொடூரமாகப் படுகொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்ட விடயமும் தற்போது அம்பலமாகியிருக்கின்றது. வார்த்தைகளில் கூறிவிடமுடியாத கொடூரமான தமிழினப் படுகொலை இடம்பெற்றிருக்கின்றது என்பதற்கான மிகமுக்கியமான ஆதாரமாகவே செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்க்கமுடிகின்றது - என்றார். (அ-ம-26)

## செம்மணி...

உறுப்பினர் கிட்ணன் செல்வராஜ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணி விவகாரம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியின்கீழ் நீதியான விசாரணை முன்னெடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. அதேபோல குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கு ஏதுவான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும். இனவாதத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் அரசியற் தலைமைகள்செயற்படுகின்றனர். தென்னிலங்கையில் இனவாதிகளின் அரசியலுக்கு சாவுமணி அடித்ததுபோல வடக்கு, கிழக்கிலுள்ள அரசியல் வாதிகளுக்கும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படும். எனவே, இனவாதத்தைக் கைவிடுமாறு தமிழ் அரசியற் தலைவர்களைக் கோருகின்றோம் - என்றார். (அ-ம-44)

## மாமுனை...

கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது. கடற்படைக்கு தகவல் வழங்கப்பட்டு அந்தக் கைக்குண்டு பாதுகாப்பாக மீட்கப்பட்டதுடன், மருதங்கேணிப் பொலிஸாரிடம் தற்போது பாரப்படுத்தப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-113)

## நல்லூர்...

சந்தர்ப்பத்தில் பல்வேறு நபர்களிடம் இருந்து இந்த நகைகள் திருடப்பட்டுள்ளன. முறைப்பாடுகள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய ஒப்பந்தத்தால் பிரச்சினை ஏற்படலாம்

## மைத்திரிபால சிறிசேன அச்சம்

**கொழும்பு, ஓக.22**

**இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தால் எதிர் காலத்தில் பாரதூரமான பிரச்சினை ஏற்படக் கூடும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன எச்சரித்துள்ளார்.**



இதுதொடர்பில் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:-
இந்தியா மற்றும் இலங்கைக்கிடை யில் அண்மையில் பாதுகாப்பு ஒப்பந் தம் கைச்சாத்திடப்பட்டது. எதிர்காலத் தில் இது பாரதூரமான பிரச்சினையை ஏற்படுத்தக்கூடும். ஜே.ஆர். ஜயவர் தன காலத்தில், புலிகள் செயற்பட்ட போது இந்தியா எமக்கு பருப்புப் போட் டது. ஜே.ஆர். அரசை அச்சுறுத்தி இலங்கை, இந்திய ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் பின்னர் 13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது. மாகாணசபை கள் உருவாக்கப்பட்டன. ஆனால் கடந்த 11 வருடங்களாக மாகாண சபைகள் இயங்கவில்லை. அதிகாரி களுக்கு வேலை இல்லை. அவர்கள் சும்மா இருக்கின்றனர். கோடிக்கணக் கான பணம் வீண்விரயமாகின்றது. எமது நாட்டில் அல்லாமல் அழுத்தத் தின் பிரகாரம் இம்முறையை உரு வானதால்தான் பிரச்சினைகள் ஏற் பட்டுள்ளன - என்றார். (எ-44)

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆன்மிக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக.22
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட் டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல்10.45 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத் தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் ஆசிரியர் இரா.செல்வவடிவேல் கலந்துகொண்டு 'மகாபாரதம்' எனும் தலைப் பில் தொடர் ஆன்மிகச் சொற்பொழிவு ஆற்று வார். (ச-66)

# வலிகாமம் மேற்கின் பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஓக.22
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி காமம் மேற்குப் பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அராலி இந்துக் கல் லூரி மைதானத்தில் சங்கானை பிரதேச செயலாளர் கவிதா உதயகுமார் தலைமை யில் இடம் பெறவுள்ளது .
நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் மேற்கு சுழிபுரம் பிரதேச சபை தவிசாளர் ச.ஜயந்தன், கௌரவ விருந்தினர்களாக யாழ் மாவட்ட செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி வி.சுகுணாளினி, அராலி இந்துக் கல்லூரி அதிபர் ந.சிவானந்தராஜா, அராலி தெற்கு சிற்பக் கலைஞர் ச.விஜயசிறி ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர் . (ச-159)

# தமிழ்வேள்வி

தமிழி அமைப்பின் ஏற்பாட்டில் பேராசிரியர் கலாநிதி. சு.வித்தி யானந்தன் நூற்றாண்டு ஞாப கார்த்தத் தமிழ்வேள்வி - 2025 நிகழ்வு நாளைமறுதி னம் ஞாயிற்றுக்கிழமை பிற்ப கல் 2.30 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடக் கூவர் அரங்கத் தில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர். சிவக்கொழுந்து சிறிசற்குண ராஜா, யாழ்ப்பா ணம் இந்தியத் துணைத்தூதர கத்தின் முன்னாள் துணை வேந்தர் ஆறுமுகம் நடராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்க ளாகக் கலந்துகொள்ளவுள் ளனர். (ச-66)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 22
தமிழாசிரியரும் எழுத்தாளருமான கனக பாரதி செந்தூரன் எழுதிய 'அப்பாவின் நிலம்' சிறு கதைத் தொகுப்பு நாளை சனிக்கிழமை வெளி யிடப்படவுள்ளது.
கிளிநொச்சி - திறன்விருத்தி மண்டபத்தில் பிற்ப கல் 2.30 மணிக்கு நிகழ்வுகள் நடைபெறவுள் ளன. நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் விருந்தினராகக் கலந்துகொள்ளவுள் ளார். (ம)



*வடமாகாண தொழிற்றுறைத் திணைக் களத்தின் மாதிரிக் கிராம வேலைத் திட்டத்தின்கீழ் கோவில் குடியிருப்பு, தனங்கிளப்பு மற்றும் அல்லாரைக் கிராம அலுவலர் பிரிவுகளில் 50 வீத மானிய அடிப்படையில் தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.* (ச-25,9)

# கழுத்து வெட்டப்பட்டு பெண் கொலை

கொழும்பு, ஓக.22
குருணாகல, ஹெட்டிபொல பொலிஸ் பிரி விக்குட்பட்ட அமுனுகொலேப் பிரதேசத்தில் கழுத்து வெட்டப்பட்டு பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் கொலைசெய்யப்பட்டுள் ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 68 வயதுடைய பெண்ணே இவ்வாறு கொலைசெய்யப்பட்டவராவார்.
கொலைக்கான காரணம் இதுவரையில் கண் டுபிடிக்கப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# இந்திய, சீன ஒப்பந்தங்களை பகிரங்கப்படுத்தவேண்டும்!

## வலியுறுத்துகின்றார் தயாசிறி

கொழும்பு, ஓக.22
இந்தியா மற்றும் சீனாவுடன் இந்த ஆட்சியின்கீழ் கைச்சாத்தி டப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர் பில் நாடாளுமன்றத்துக்கும், நாட்டு மக்களுக்கும் இன்னும் தகவல்கள் வெளிப்படுத்தப்படா மல் உள்ளன என்று நாடாளு மன்ற உறுப்பினர் தயாசிறி ஜய சேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித் துள்ளதாவது:-
எமது அயல்நாடான இந்தியா எமக்கு பலத்தையும், ஒத்துழைப் பையும் வழங்கும் நாடாகும். அதேபோல சீனா இலங்கையில் அதிகளவு முதலிட்டுள்ளது. ஒத் துழைப்புகளையும் வழங்கிவரு கின்றது.
இலங்கை அபிவிருத்தி அடைந் துவரும் நாடாகும். அதனால் அனைத்து நாடுகளுடனான உறவு முக்கியம். எமது இறை யாண்மையைப் பாதுகாத்துக் கொண்டு சிறந்த இராஜதந்திர உறவை பேணவேண்டும்.
இந்தியாவுடன் கைச்சாத்திடப் பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கும், மக்க ளுக்கும் எதுவும் தெரியாமல் உள்ளது. இந்த ஒப்பந்தங்கள் தொடர்பில் பல்வேறு கருத்துகள் உள்ளன. இந்திய ஊடகங்க ளில் வெளியாகும் உள்ளடக்கங் களை வைத்துக்கொண்டு நீதி மன்றத்தையும் நாடமுடியாது.
அதேபோல சீனாவுடன் ஒப்பந் தங்கள் கைச்சாத்திடப்பட்டுள் ளன. அவை என்னவென்றும் தெரியாது. இலங்கையின் இறையாண்மை, அடையாளம், எதிர்காலம் என்பவற்றைக் கருத் திற்கொண்டே நகர்வுகள் இடம் பெறவேண்டும் - என்றார். (எ-44)

**வேலையாட்கள் தேவை**
முழங்காவில் நாச்சிக்குடா சந்தியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- சமையலாளர்
- உணவு பரிமாறுபவர்
- றொட்டி போடுபவர்

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
077 627 5024

**மணல் விற்பனைக்கு**
கட்டட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு. கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப் பத்திரம் போட்டு தரப்படும்.
தொடர்புகளுக்கு: 076 3249 977
077 4121 100
(CS 59178) A


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org